Paper ID: IC24

# Contribution of medieval Islamic Thinkers to the development of Science in the Period of Renaissance

**Pulenthiran Nesan**

Assistant Lecturer, Department of Philosophy,
Faculty of Arts, University of Peradeniya, Sri Lanka.
Pnesan92@gmail.com

**Abstract.**

The medieval period is widely reported to be the darkest period for the development of knowledge in European history. The dominant influence of the religion prevailed at this time, and the Greek Scientific theories were banned and religious ideas were filled. Medieval period Islamic philosophers such as Al Hindi, Al Barabhi, Ibn Seena and Al Gashali contributed in the development of Islamic philosophy. These philosophers have acquired new discovery attempts in astronomy, cosmology, physiology and science. This made a platform for science and physiology at the later stages. In particular, their views were similar to those of the Aquinas and Anselm. The ideas of Islamic philosophers have greatly influenced in the renaissance. The role of Islamic philosophers is significant. This research focuses on this concept. Comparative and descriptive analysis methods are used in this research. This research emphases the thinking of medieval Islamic philosophers has a significant contribution to the discoveries of European renaissance.

**Keywords:** Medieval Period, Science, Renaissance

## மலர்ச்சிக்கால அறிவியல் துறை வளர்ச்சிக்கு மத்திய கால இஸ்லாமிய மெய்யியலாளர்களது பங்களிப்பின் முக்கியத்துவம்.

### மத்திய காலமும் இஸ்லாமும்

மத்தியகாலத்தை இடைக்காலம், இருண்ட காலம் என்று வரலாற்று அறிஞர்கள் வர்ணிப்பர். இலக்கியம், கலை, பண்பாடு, நாகரிகம், சிந்தனை, வாழ்க்கை நிலை ஆகிய அனைத்து துறைகளும் வளர்ச்சியின்றி முடங்கிப்போன காலமாக இடைக்காலம் கருதப்பட்டது. உரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக்காலமான கி.பி ஐந்தாம் நூற்றாண்டு முதல் மறுமலர்ச்சி காலமான பதினைந்தாம் நூற்றாண்டு வரை இம் மத்தியகாலம் நீடித்தது. ஏறத்தாழ பத்து நூற்றாண்டுகள் உலகச் சிந்தனை உறக்கம் கொண்டது எனலாம். அறிவியல் முயற்சிகள் முற்றிலுமாக தடைப்பட்டு சமயத்தில் உலகம் மூழ்கிக் கிடந்த இருண்ட காலம் என்றெல்லாம் குறிப்பிடப்படுகிறது.

மத்திய காலத்தில் கற்றவர்களில் அதிகமானோர் மதகுருமார்கள் ஆகும். அக்காலத்தில் கல்வி மேம்பட்ட சமூகத்தால் மட்டுமே பெறப்பட்டது. கல்வி பொதுவானதாக காணப்படவில்லை. கல்வியறிவின்றி மக்கள் அறியாமையில் மூழ்கிக் கிடந்தனர். சமயம் செல்வாக்குமிக்க சமுதாய நிறுவனமாக வளர்ச்சியடைந்து காணப்பட்டது. மக்களது பிறப்பு, இறப்பு போன்ற சடங்குகள் சமயவாணர்களால் நடாத்தப்பட்டது. இக்காலத்தில் விஞ்ஞான சிந்தனைகளுக்கு இடமளிக்கப்படவில்லை. நம்பிக்கை என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக மத்தியகாலத்தில்

காணப்பட்டது. ‘‘விளங்கிக் கொள்ள வேண்டுமாயின் நம்பிக்கை கொள்ள வேண்டும் – அகஸ்டீன்’’ என்ற இவரது கருத்து மத்தியகால தத்துவத்தின் தன்மையை வெளிப்படுத்துகின்றது.
சமயத்திற்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டதால் அறிவு ரீதியான சிந்தனைகள் எதிர்க்கப்பட்டன. சமயத்துக்கு முரணான பேச்சுக்கள் சொற்கள் கூறுபவர்களை உயிரோடு வைத்து எரித்த காலமாக காணப்படுகின்றது.

- கலிலியோ கலிலியினால் கண்டுபிடிக்கப்பட்ட தொலைகாட்டிக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
- புரூனே என்பவர் திருச்சபைக்கு எதிராக கருத்துக்களை முன்வைத்ததற்காக தீயில் இடப்பட்டார் போன்றன சான்றாகும்.

மேலும் மத்திய காலமானது கிறிஸ்தவர்களையும், இஸ்லாமியர்களையும் மையப்படுத்தியது. அந்த வகையில் கிறிஸ்தவ மெய்யியலாளர்களைப் போலவே இஸ்லாமிய மெய்யியலாளர்களின் மெய்யியலும் குறிப்பிடத்தக்க செல்வாக்குப் பெற்று காணப்பட்டது. கி.பி 7 ஆம் நூற்றாண்டு வரை மெய்யியல் என்ற கலையை முஸ்லிம்கள் அறிந்திருக்கவில்லை. கிரேக்க முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தை போதனை செய்த போது மனிதனின் சாதாரண சிந்தனைக்கு ஏற்றுக் கொள்ள முடியாத பல கருத்துக்களை முன்வைத்தார். நாடோடியாக இருந்த பாலைவன மக்கள் மத்தியில் மெய்யியல் ரீதியான சிந்தனை காணப்படவில்லை. ஆனால் இஸ்லாமிய அடிப்படை மூலாதாரங்களான குர் ஆன் இவ்வகையான சிந்தனைகளை முன்வைக்காமலில்லை.

இஸ்லாமிய மெய்யியல் சிந்தனை சிரியா தொடர்பிலிருந்து ஆரம்பமாகிறது. முஸ்ஸிம்கள் 7ஆம் நூற்றாண்டில் பல நாடுகளை வெற்றி கொண்ட போது அந்நாடுகளில் காணப்பட்ட சிந்தனைகள் இஸ்லாமியர்களிடம் செல்வாக்கு செலுத்த தொடங்கின. இஸ்லாமிய மெய்யியல் என்பது இஸ்லாமிய சமய, சமூக, பண்பாட்டுடன் தொடர்புடைய மெய்யியல் ஆகும். பொதுவாக இது இஸ்லாமிய சூழலில், இஸ்லாமியர்களால் ஆக்கப்பட்டது. இஸ்லாமிய மெய்யியல் பாரசீகம், அரபு, உருது, இந்தோனேசியன், துருக்கி, ஆங்கிலம், தமிழ் என பல மொழிகளில் ஆக்கப்பட்டு பகிரப்படுகிறது. இஸ்லாமிய மெய்யியலில் இறை, சட்டம், சமய நம்பிக்கைக்கும் பகுத்தறிவுக்குமான உறவு ஆகியவை பற்றிய ஆய்வுகள் முக்கியமானவை.

இஸ்லாத்தில் கூறப்பட்ட கருத்துக்களை தெளிவாக புரிந்து கொள்ளாத சிலர் எழுப்பிய வினாக்களுக்கு சிந்தனை ரீதியாக விடையளிக்கும் முயற்சியில் இஸ்லாமிய சிந்தனை வாதிகள் கிரேக்க மெய்யியலாளர்களுடைய கருத்துக்களை ஆராய்ந்தனர். இப்பின்னணியில் கிரேக்க மொழியில் காணப்பட்ட நூல்களை அரேபியில் மொழிபெயர்க்க ஆரம்பித்தனர். பின்னர் சுய படைப்புக்கள் பலவற்றையும் உருவாக்கினர்.

இஸ்லாமிய கலாச்சாரத்தில் அறிவியல், தத்துவத் தொடர்பு அல்-ஹிந்தியிலிருந்து ஆரம்பமாகிறது. ஹெலனிய பாரம்பரியத்தை இஸ்லாமியத்தோடு முன்வைத்ததன் மூலம் ஹிந்தி ஒரு புதிய மெய்யியலை தோற்றுவித்தார். அந்த வகையில் இஸ்லாமிய மெய்யியலாளர்களில் இஸ்லாமிய மெய்யியலை வளர்ச்சி அடைய செய்தவர்களில் முக்கியமானவர்களாக,

- அல்ஹிந்தி
- அல்பாராபி
- இப்னு சீனா

- பூவலி மஸ்கலி
- இமாம் கஸ்ஸாலி

போன்றவர்களைக் குறிப்பிட முடியும்.

**இஸ்லாமிய மெய்யியலாளர்களும், அறிவுத்துறை வளர்ச்சியில் அவர்களது பங்களிப்பும்.**

கிரேக்க காலமானது ஐரோப்பிய வரலாற்றின் பொற்காலம் என்று அழைக்கப்பட்டது. இவ் உலகிற்கான அத்தனை அரசியல், பொருளாதார, கலாசார, சமய, சமூக என அத்தனை அம்சங்களுக்குமான அடிப்படை கிரேக்கத்திலேயே தோற்றம் பெற்றது. இவ்வாறு காணப்பட்ட அம்சங்கள் பிற்பட்ட கால கிழக்கு உரோமப் பேரரசின் சரிவினால் வீழ்ச்சியுற்றது. அதனைத் தொடர்ந்து அவ் அறிவுப் பொக்கிசங்களும் மங்கிச் செல்லும் நிலைமையைப் பெறலானது. இவ்வாறான கிரேக்க அறிவு மூலாதாரங்கள் இஸ்லாமிய மெய்யியலாளர்களால் அரபு மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்டும், அவற்றை ஆதாரமாகக் கொண்டு அறிவியல் கண்டுபிடிப்புக்கள் நிகழவும் ஏதுவானதுடன் அதுவே பிற்காலத்தில் ஐரோப்பிய மறு மலர்ச்சியையும் தோற்றுவித்தது. அறிவு முதிர்ச்சி மிக்க இஸ்லாமிய தத்துவ அறிஞர்கள் பலரும் தோன்றி அறிவியலையும் மெய்யியலையும் பெரு வளர்ச்சிப் பாதையை நோக்கிக் கொண்டு செல்லலாயினர்.

ஐரோப்பா இருளில் இருந்தபோது கல்வி என்னும் ஒளியை இஸ்லாம் உலகுக்கு வழங்கியது என்று அடிக்கடி கூறப்படும் உரையின் வரலாறு இவ்வாறுதான் அமைந்துள்ளது. தனது நாகரீகக் கட்டமைப்புக்குள் ஏனைய உயர்ந்த நாகரீகக் கூறுகளை உள்வாங்குவதற்கு இஸ்லாத்தில் இருந்த முன்னேற்றச் சக்தியின் தவிர்க்க முடியாத செயல்பாடாக இது அமைந்தது எனக் கூற முடியும். இந்த ஆற்றல் குர் ஆனிலிருந்தும் கல்வி தொடர்பான ஞானங்களை பெறுவது தொடர்பான நபி அவர்களின் கோட்பாடுகளின் தூண்டுதலில் இருந்தும் அன்றைய முஸ்லிம் அறிஞர்கள் பெற்றிருந்ததாக நம்பலாம். நபிகளின் வபாத்தைத் தொடர்ந்த வெறும் ஐம்பது ஆண்டுகளுக்குள் இஸ்லாமிய உலகில் இத்துறை பாரிய வளர்ச்சி கண்டமையை உலக அறிஞர்கள் ஆச்சரியத்துக்குரிய நிகழ்வாகவே பார்க்கிறார்கள்.

ஏழாம் நூற்றாண்டில் இருந்து பதினான்காம் நூற்றாண்டு வரை மெய்யியலுடன் நெருக்கமானதொரு கல்வியமைப்பு முஸ்லிம் உலகில் இருந்திருக்கிறது. கிரேக்க மொழியில் இருந்து அரபு மொழிக்குப் பெயர்க்கப்பட்ட நூல்களை முஸ்லிம்கள் கீழைத்தேயத்திற்கும், மேலைத் தேயத்திற்கும் ஏந்திச் சென்றனர். இதன் காரணமாக கிரேக்க மொழியைப் போன்றே அரபு மொழியிலும் எண்ணற்ற மெய்யியல் மற்றும் விஞ்ஞான துறை நூல்கள் எழுதப்பட்டன. புதிய கருத்துக்களையும் கண்டு பிடிப்புக்களையும் முஸ்லிம் சிந்தனையாளர்கள் உலகுக்கு வழங்கினர்.

குறிப்பாக 8ம் நூற்றாண்டில் இருந்து 14ம் நூற்றாண்டு வரை எழுதப்பட்ட அரபு பாரசீக முஸ்லிம் அறிஞர்களின் மெய்யியல் விஞ்ஞான நூல்கள் இன்னும் நூற்றுக் கணக்கில் தேடி எடுக்கப்படாத நிலையில் பண்டைய இஸ்லாமிய கல்வி நிலையங்களாக விளங்கிய இடங்களில் போதிய பாதுகாப்பற்ற நிலையிலும் பழுதடையும் நிலையிலும் இருந்த வருகின்றன. அவற்றில் இருந்து மிகக் குறைவான நூல்களே தேடிப்பெறப்பட்டு உலகை வந்தடைந்துள்ளன. மனித அறிவு வளர்ச்சிக்கு முஸ்லிம்கள் வழங்கிய எல்லையற்ற பங்களிப்பு துருப்பிடித்த நிலையில் இருண்ட அறைகளில் முடங்கிக் கிடப்பதை ஐ.நா கல்வி நிறுவனங்கள் கவலையுடன் தெரிவித்துள்ளன. (அனஸ். எம். எஸ். எம்.)

பக்தாத், பஸ்ரா, கூபா, டமஸ்கஸ், அலெக்ஸ்ஸாண்ட்ரியா, ஐரோப்பாவில் ஸ்பெயின் போன்ற நாடுகளின் பண்டைய முஸ்லிம் கல்விக் கூடங்களில் இருந்து கண்டு பிடிக்கப்பட்ட இவ்வாறான பல

நூல்களை ஐ.நா கடந்த காலங்களில் அரபு, ஆங்கில மொழிகளில் பதிப்பித்துள்ளது. எனினும், தொடர்ந்து இவ்வாறான மூலப் பிரதிகளைத் தேடிக் கண்டுபிடித்து பரிசோதித்து புத்தகங்களாக பதிப்பிப்பதற்கு தேவையான நிதி வளம் இல்லை என்று காரணம் கூறி ஐ.நா இப்பணிகளை இடை நிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

- **அல்ஹிந்தி – கி.பி 800 - 879**

கி.பி 8ம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட இஸ்லாமிய மெய்யியல் முஸ்லிம்களால் கிரேக்க மொழி சார்புடன் பலாஸிபா (FALASHIFA) என்றழைக்கப்பட்டது. அரபு மக்களின் முதல் மெய்யியலாளன் என்று அரபுலகம் இவரைப் போற்றியது. கிரேக்க நூல்களை மொழி பெயர்த்தவர்களில் அவருடைய பெயரும் வருகிறது. அவர் சுயமாக நூல்களை மொழி பெயர்த்தது மட்டுமல்லாமல் மொழிபெயர்ப்பு நூல்களைத் திருத்தியும் வெளியிட்டார். அவர் ஜோதிடராகவும், மருத்துவராகவும் இருந்ததால் அவற்றினாலும் அவர் அரசவையில் இருந்திருக்க கூடும். ஹிந்தி எல்லாத் துறைகளிலும் திறமையுள்ளவர். தனது காலத்திய கலைப் பண்பாடுகளையும் கல்வி விடயங்களையும் நன்கு கற்றறிந்தவர். நிலவியல், வரலாறு, ஜோதிடம், கணிதம், மருத்துவம், தத்துவ இயல் ஆகிய எல்லாத் துறைகளையும் கற்றறிந்தவர். அவருடைடய பெரும்பாலான நூல்கள் கணிதம், ஜோதிடம், நிலவியல், மருத்துவம், தத்துவ இயல்களின் மேல் எழுதப்பட்டுள்ளன. ஹிந்தி ஒரு பக்கம் இரசாயனவியலைத் தவறென்று கூறி அதை நம்புபவர்களை அறிவற்றவர்களென்றும் சொன்னார். மறுபக்கம் கிரகங்களின் கைகளில் மனிதர்களின் எதிர்காலத்தை ஒப்படைத்து விடுவதைப் பெரிய விஞ்ஞானம் என்று எடுத்துரைப்பது வியப்புக்குரியதாகும். ஒவ்வொரு விடயம் பற்றிய உண்மையை அறிவதற்கும் பகுத்தறிவு ரீதியான சிந்தனை அவசியம் என்றார்.

மேலும் மெய்யியல் வாதங்களில் மனித வாதங்களைவிட குர்-ஆன் வாதங்கள் உறுதியானவை எனக் கூறிற்று. ''எலும்புகள் தூளாக்கப்பட்ட பின்னரும் அவற்றுக்கு உயிர் கொடுக்கப்படுமா? அவர்களை முன்னர் யார் படைத்தாரோ அவர் அவர்களுக்கு உயிர் தருகிறார்'' இவ்வாறு இஸ்லாம் சமயத்தை சாராத ஒருவரால் கேட்கப்பட்ட வினாவுக்கு குர்-ஆனில் இருந்து விளக்கங்களை முன்வைக்கும் முறை அல்ஹிந்தியினால் முன்வைக்கப்பட்டது. ஹிந்தி கடவுளுக்கும் உலகத்துக்குமிடையே உலக உணர்வு அல்லது உலக வாழ்க்கை உள்ளது. இந்த உலக வாழ்க்கையிலிருந்தே முதலில் தேவர்களும் பின்னர் மனித உயிர்களும் தோன்றுகின்றன என்கின்றார்.

இவ்வாறான ஹிந்தியின் பங்களிப்புக்கள் மறுமலர்ச்சிக்காலத்திலே பல்வேறுபட்ட கலைப் படைப்புக்ககளும் உலகப்புகழ் பெறுமளவிற்கு வளர்ச்சியடையவும், மருத்துவ அறிவுத்துறையிலும் மாபெரும் விருத்தி நிகழவும் ஏதுவானது.

- **அல்-பாராபி**

பாராபி தத்துவ இயலுடன் இலக்கியம், கணிதம், ஜோதிடம், மருத்துவம் முதலியவற்றையும் கற்றார். அவர் இசை குறித்தும் எழுதியிருக்கின்றார். துருக்கி மொழி அவரது தாய் மொழியாகும். பாரசீகம் அவர் பிறந்த மண்ணில் பரவியிருந்தது. அராபிய மொழி இஸ்லாமின் சொந்த மொழியாகும். ஆக இம் மூன்று மொழிகளிலும் பாராபிக்கு நல்ல புலமை இருந்திருக்குமென்பதில் சந்தேகமில்லை. இவர் 70 மொழிகள் வரை அறிந்திருந்ததாக குறிப்பிடப்படுகிறது. இஸ்லாமிய உலகில் மெய்யியலுக்கு மேலானதோர் இடத்தை வழங்கினார் என்று பாராபி குறிப்பிடப்படுகிறார்.

பாராபி தன் புலமையை சிறு சிறு நூல்களில் எழுதியுள்ளார். அவற்றுள் விவாதக்கலை, பிரம்மவாதம், இயற்கைத்தத்துவம் என்பன வடிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவரது முதிர்ந்த அறிவு

அரிஸ்ரோட்டிலின் நூல்களின் விமர்சனத்தில் வெளிப்பட்டுள்ளது. இதற்காக இவர் 2ம் அரிஸ்ரோட்டில் என அழைக்கப்படுகிறார். மேலும் இவர் அரிஸ்ரோட்டில், பிளேட்டோ ஆகிய இருவரதும் தத்துவம் நன்கு உணர்ந்து அவற்றை இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். இந்த இணைப்பில் இஸ்லாத்திற்கும் இடம் வழங்கியதால் நாஸ்திகன் என்ற பட்டத்திலிருந்து அவரால் தப்பித்துக் கொள்ள முடிந்தது.

பாராபி தர்க்கவியல் பற்றிக்கூறும் போது அது தெரிந்த நிரூபிக்கப்பட்ட பொருளால் தெரியாத பொருளை அறிவது தர்க்கமாகும் என்றார். தர்க்கம் என்பது வெறும் உதாரணங்களால் விளக்கப்பட்ட ஆய்வு அல்லது ஊகம் மட்டுமல்ல. இது அறிவு நிரூபணத்திற்கு உதவி செய்வதாகவும் குறிப்பிடுகிறார். ஹிந்தியைப் போலவே பாராபியும் அறிவை மனிதன் தன் முயற்சியின் விளைவாக பெறுவதாக கருதாமல் கடவுள் அறிவதாக கருதுகிறார். ஆன்மா உடலுக்கு முழுமையைத் தருகிறது. ஆனால் ஆன்மாவுக்கு முழுமை அளிப்பது அறிவு (விஞ்ஞானம்) ஆகும். இவ்விஞ்ஞான அறிவு குழந்தையின் ஆன்மாவில் இருக்கிறது. ஆரம்பத்தில் இது உறங்கிக் கிடக்கிறது. புலன்களும் கற்பனை சக்திகளும் இயங்கத்தொடங்கியதுமே சிறுவனுக்கு உருவமுள்ள பொருட்கள் தெரிய ஆரம்பிக்கின்றன. ஆனால் அந்த அறிவு உறங்கிய நிலையில் இருந்து விழிப்பு நிலைக்கு வருவது மனித முயற்சியின் பயனாக அல்ல. அது கடவுளின் சக்தியினால் ஆகும்.

அரிஸ்ரோட்டில் போன்ற பெரும் தத்துவ அறிஞர்களின் கருத்தை விளக்குவதே பாராபியின் முக்கிய கருத்தாக இருந்தது. ஆகவே அவர் பெரியளவில் சுதந்திரமாக சிந்தனை செய்யவில்லை. பாராபி மதத்திற்கும், சூதுவாதத்திற்கும் அஞ்சினாலும் தர்க்கமும் சுதந்திர சிந்தனையும் அவரை ஆட்கொண்டிருந்தது. இதன் விளைவாக அவர் ஜோதிடத்தையும், இரசாயணவியலையும் மூடநம்பிக்கை என்று கருதினார். இதன் பிரதிபலிப்பை மறுமலர்ச்சிக்கால பகுத்தறிவு சிந்தனை வளர்ச்சியிலும், அறிவுக்கு முதன்மை கொடுத்து மூடநம்பிக்கைத் தழைகளை அடியோடு அகற்றுவதில் அறிவியல் சமூகம் முயற்சித்ததைக் காணலாம். இவற்றிற்கு அல் பாராபியின் சிந்தனைத் துளிகள் பெரிதும் தூண்டுகோலாகக் காணப்பட்டது.

- **இப்னு சீனா** (கிபி 980 - கிபி 1037)

சீனாவினால் கீழைத்தேய இஸ்லாமிய தத்துவயியல் முன்னேற்றத்தின் சிகரத்தை அடைந்ததென்று கூற முடியும். இவர் பன்னெடுங்காலமாக வந்து கொண்டிருந்த சம்பிரதாய கல்வியிலிருந்து இளம் வயதிலேயே அவர் தன்னை விடுவித்துக் கொண்டார். தத்துவவியலிலும் கூட பெறும் விளக்க உரை தத்துவவியலை ஒப்பு நோக்கி ஆராய்ந்து தனது சொந்த நடையை வளர்த்துக் கொண்டார்.

சீனா முன்னிருந்த அறிஞர்களின் நூல்களுக்கு விளக்க உரையோ விமர்சனமோ எழுதவில்லை. அந்நூல்கள் குறித்து சுதந்திரமாக சிந்தித்து முடிவுக்கு வரவேண்டியதுதான் காலத்தின் தேவை என சீனா கருதினார். அவரது தத்துவ நூல்களில் மூன்று நூல்கள் முக்கியமானவையாகும்.

1. ஹக்பா (மருத்துவம்)
2. இஹாரத் (குறியீடு)
3. நஜாத் (சக்தி)

இவற்றில் ஹக்பாவில்தான் அரிஸ்டோட்டிலின் கருத்துக்களை சார்ந்த விடயங்கள் நிரம்பியுள்ளதாக சீனா கூறுகிறார். இஹாரத்தில் கூறப்பட்டுள்ள தொழுகை முக்கியத்துவம் தொழுகையின் அவசியம், அற்புதச் செயல் ஆகியவை கிரேக்க தத்துவத்திலிருந்து விலகி நிற்கின்றன. கிரேக்க தத்தவ அறிஞர்களைப் போலவும் அவர்களது சீடர்களான இஸ்லாமியத்தத்துவாசிரியர்கள் போலவும் கடவுளிடமிருந்து முதல் விஞ்ஞானம் தோன்றியதாகவும் அதிலிருந்து இரண்டாம் விஞ்ஞானம் வந்ததாகவும் கருதினார். சீனா ஜீவனை இயற்கையைக்காட்டிலும் உயர்ந்ததாக எண்ணினார். இது

கடவுளுடன் கூடிய சாங்கியமென்னும் இந்திய தத்துவ இயலுடன் ஒன்றுபடுகிறது.

**பூவலி மஸ்கலி**

மஸ்கல்யாவின் கருத்துப்படி மதம் என்பது மக்களுக்கு நன்னடத்தை கற்பிக்கும் ஒரு வழியாகும். நமாஜீம் (கடவுளரைத் தொழுவதும்), ஹஜ்ஜீம் (மக்காவுக்கு புனித யாத்திரை செய்வதும்) சமுதாயத்திலுள்ள மற்றவர்களுடன் நெருங்கிப்பழகக் கூடிய பெரும் வாய்ப்புக்களாகும். குறுகலான மத வெறி இல்லாததும் மனித வாழ்க்கையில் சமுதாயத்திற்கு முக்கிய பங்கு அளித்ததையும் காணும் போது மஸ்கல்யாவின் சிந்தனை எத்தனை விசாலமானதாகவும் கம்பீரமானதாகவும் இருக்கின்றதென்பது தெரிய வருகின்றது.

மஸ்கல்யா மனித ஜீவனிலும், மிருக ஜீவனிலும் வித்தியாசம் காண்கிறார். அவர் கடவுளைக் குறித்து மனிதனின் சிந்தனையைக் கண்டு மிருக ஜீவனை மனித ஜீவனுடன் சேர்க்க முடியாதென்ற முடிவுக்கு வருகிறார். இவ்வாறாக மஸ்கல்யாவின் பங்களிப்பும் மறுமலர்ச்சியின் அறிவுத்துறை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

- **அல் - கஸ்ஸாலி**

இப்ன் முஹம்மத் அல்கஸ்ஸாலி பாரசீகத்தின் தூஸ் நகரில் பிறந்தார். இவர் உண்மையான அறிவின் உரைகல்லாக ஐயத்தை ஏற்றிருந்தார். வலிதான மெய்யறிவை அல்லது பகுத்தறிவை தேடி அறிவதற்குரிய அடித்தள அமைப்பாக ஐயத்தை அவர் பயன்படுத்தினார். உண்மையைக் கண்டறிவதில் அவருக்கிருந்த ஆர்வம் அவரது இளமைப்பருவத்திலிருந்தே ஆரம்பிக்கிறது ‘‘இளமையிலிருந்தே உண்மையை அறிய வேண்டும் என்ற தாகமுடையவனாக இருந்தேன், அது என் உள்ளத்தில் உயர்ந்த பண்பாக இருந்தது’’ என அவர் குறிப்பிட்டள்ளார்.

இளமைக்காலத்தில் ஆரம்பித்த இவரது உண்மை தேடும் தீவிரப் போக்கு அவரது வாழ்வையும் கருத்துக்களையும் மாற்றியமைத்தது. சுதந்திர மனத்துடன் உண்மையை ஆராயும் மனப்பக்குவத்தை அவர் பெற்றார். ‘‘ஐயுறாதவன் ஆராயமாட்டான்’’ என்ற கருத்தை தனது இளமைக் காலத்திலேயே அவர் வெளியிட்டார். இவரது ஐயவாதம் அறிவின் இயல்பையும், உறுதித்தன்மையையும் ஆராயும் பின்னணியைப் பெற்றிருந்தது.

இவர் இறையியல், சட்டம், நீதி, அளவையியல், இசையியல், மெய்யியல் போன்ற பல்துறைகளில் நானூறு நூல்களை எழுதியுள்ளார். இவற்றுன் பல காணாமல் போய்விட்டன, சில எதிர்வாதிகளால் எரிக்கப்பட்டன. ‘யாக்கூத்துத்தாவில்’ என்ற தலைப்பில் அல்குர்ஆனுக்கு எழுதிய நாற்பது பக்கங்களைக் கொண்ட விரிவுரை அவ்வாறு காணாமல் போன நூல்களில் ஒன்று எனக் குறிப்பிடப்படுகிறது.

உலகில் பிறக்கும் ஒவ்வொருவரும் சரியான இயற்கை நிலையில் தான் பிறக்கின்றனர். ஆனால் அவர்களின் பெற்றோர்கள் தாம் அவர்களை யூதர்களாகவோ, கிறிஸ்தவர்களாகவோ ஆக்கி விடுகின்றனர் என்ற நபிகளின் வாக்கு மனித அறிவு பற்றிய கருத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதாக கஸ்ஸாலி கூறுகிறார். உண்மையில் இயற்கை நிலை என்றால் என்ன? பெற்றோர்களதும் ஆசான்களதும் அதிகாரங்களிலிருந்து பெறப்பட்ட நம்பிக்கைகளின் தன்மை என்ன? என்று அறிய தமது அகஉணர்வு துடித்ததாக கஸ்ஸாலி குறிப்பிட்டுள்ளார். இத்தகு புதிய எண்ணங்களின் வாயிலாக அறிவு பற்றிய தூய விசாரணையின் எல்லைக்கு கஸ்ஸாலி பிரவேசித்தார். விடயங்களையல்ல அறிவை ஆராய்வதே தமது நோக்கம் என அவர் குறிப்பிட்டுள்ளார். ‘பொருள்களின் யதார்த்தம் என்ன? என்ற அறிவையே நாம் தேடுகிறோம், ஆனால் அறிவின்

யதார்த்தம் என்ன? என்பதைத் தான் முதலில் நாம் கண்டுபிடிக்க வேண்டும்.' என்கின்ற அவரது கருத்தில் இது தெளிவாகப் புலப்படுகிறது.

இஸ்லாமிய உலகு அறிவியல் துறையில் முன்னணியில் இருந்ததாகக் கூறப்படும் காலங்கள் முஸ்லிம் அறிவுலகம் தத்துவவியல் துறையிலும் வளர்ச்சி பெற்றிருந்த காலங்களே என்பதை மறுக்க முடியாது. இவ்விடயங்கள் பற்றி பேசுவோரில் பலர் இந்த உண்மைகளை நன்குணர்ந்துள்ளனரா என்பது ஐயத்திற்கிடமானது. தத்துவவியல் இல்லை என்றால் அங்கு விஞ்ஞான அறிவுக்கு வாய்ப்புக்கள் கிடையாது என்ற ஆப்கானியின் கூற்றை மட்டும் விளங்க முடிந்தால் அது பயனுள்ள முயற்சியாகும். அந்தவகையிலே கிரேக்க சிந்தனைகளின் அழிவு இஸ்லாமிய மெய்யியலாளர்களால் பிற்கால குறிப்பாக மறுமலர்ச்சிக்காலத்துடன் புத்துயிர்ப்புச் செய்யப்பட்டு அறிவுக்கண்கள் அகலத்திறக்கப்பட வழிவகையானது. இதுவே பிற்காலத்தில் பல்வேறுபட்ட அறிவியல் கண்டுபிடிப்புக்கள் நிகழவும் வாய்ப்பானது. மேலும் கிரேக்கத்தின் அறிவுப் பொக்கிசங்களின் பெறுமதியையும் பிற்கால சமூகம் இன்று வரை தெரிந்து கொள்ளவும் இஸ்லாமிய மெய்யியலாளர்களின் பங்கும் பணியும் அளப்பரியது.

**References.**


- அனஸ், எம்.எஸ்.எம், (2003) "மெய்யியல் அறிமுக உரைகள்" பண்பாட்டு ஆய்வு வட்டம், பேராதனை.
- அனஸ், எம்.எஸ்.எம், (2006) "மெய்யியல் கிரேக்கம் முதல் தற்காலம் வரை" குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை.
- ஜமாஹீர்.பீ.எம், (2010) "மெய்யியல் பிரச்சினைகளும் பிரயோகங்களும்"நதா வெளியீடு : கண்டி - இலங்கை.
- ஞானகுமாரன்.நா, (2003) "மெய்யியல்" செல்வம் வெளியீடு, பருத்தித்துறை, யாழ்ப்பாணம்.
- நாராயணன்.க, (1985) "மேலைநாட்டு மெய்ப்பொருள்" (சோக்கிரடீஸ் முதல் சார்த்தர் வரை) தமிழ்ப்புத்தகாலயம், சென்னை.
- file:///G:/5%20Islamic%20Philosophers%20Every%20Muslim%20Must%20Read%20_%20HuffPost.html 10/05/2017 . 8.00 pm.
- file:///G:/Islamic%20philosophy%20-%20New%20World%20Encyclopedia.html,14/05/2017. 4.00pm
- file:///G:/Islamic%20philosophy%20-%20Wikipedia.html 26/05/2017 10.00 am